உமது தயவும் உமது இரட்சிப்பும்

Let Your Mercy and Salvation Come to Me



Album 30 Song 1 | ஆல்பம் 30 பாடல் 1



உமது தயவும் உமது இரட்சிப்பும்

ஞாயி DATE 05 05 2007 119 சங்கீதம் - வௌ (41-48)

உமது தயவும் உமது இரட்சிப்பும்
எனக்கு வருவதாக - கர்த்தாவே
உம்முடைய வாக்கின்படியே
எனக்கு வருவதாக

உம்முடைய வசனத்தை நம்பியிருக்கேன்
உம்முடைய நியாயத்தீர்ப்புக்கு காத்திருக்கின்றேன்
(உமது)

உம்முடைய வேதத்தை காத்துக்கொள்கிறேன்
உம்முடைய கட்டளைகளை ஆராய்கின்றேன்
(உமது)

உம்முடைய சாட்சிகளைக் குறித்துப் பேசுகிறேன்
உம்முடைய கற்பனைகளில் மனமகிழ்ச்சியாய் இருக்கிறேன்
(உமது)

உம்முடைய பிரமாணங்களை தியானிக்கிறேன்
உமது கற்பனைகளுக்கு நேராக கையெடுக்கிறேன்
(உமது)

ராஜாக்களுக்கு முன்பாக வெட்கப்படாமல் பேசுவேன்
சத்திய வசனம் முற்றிலும் என்வாயினின்று நீக்கவேண்டாம்
(உமது)

